# 16 சைவ சமயத்தை வளர்த்த பக்தியாளர்கள்

சனாதன தர்மமாகிய சைவநெறி இன்றளவும் நிலைத்து நிற்பதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றுள் அருளாளர்கள், ஞானிகள் பலர் காலத்துக்குக் காலம் தோன்றி அதனை வளப்படுத்திச் சென்றமை மிக முக்கிய காரணமாகும். காரைக்காலம்மையார், நாயன்மார்கள், அருளாளர்கள் முதலானோர்களினால் சைவநெறி தழைத்தோங்கியது. பக்தியாளர்களுள் சேக்கிழார் சுவாமிகள் பற்றியும், அருளாளர்களுள் அருணகிரிநாதர் பற்றியும் கற்போம்.

## அ. சேக்கிழார் சுவாமிகள்




சித்தத்தைச் சிவன்பால் கொண்ட சிவனடியார்களின் திவ்விய வரலாறுகளை பக்திச்சுவை நனி சொட்டச் சொட்ட பாடியருளியவர் சேக்கிழார் சுவாமிகள். கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டளவில் குன்றத்தூரில் உள்ள சேக்கிழார் குடியில் சேக்கிழார் அவதரித்தார். **அருண் மொழித்தேவர்** என்பது அவரது இயற்பெயர். அவரது பெற்றோர்களது விபரங்கள் அறியுமாறு இல்லை. பாலறாவாயர் என்னும் சகோதரர் ஒருவரும் அவருக்கு இருந்தார். அருண்மொழித் தேவர் இளமையில் கல்வியிலும், கேள்வியிலும், ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கினார். அதனால் சேக்கிழார் குடி பெருமை பெற்றது. அதன் காரணமாக குடிக்குரிய பெயராலே அவரைச் சேக்கிழார் என அழைத்தனர். சேக்கிழாரின் சிறப்புக்களை அறிந்த இரண்டாம் குலோத்துங்க சோழ மன்னன் (அநபாயன்) அவரைத் தனது முதலமைச்சராக்கினான். அவரின் ஆற்றல்களைப் பெருமைப்படுத்தும் வகையில் **உத்தமசோழபல்லவர்** என்ற பட்டத்தினை வழங்கினான். சேக்கிழார் அரசபணியிலும் சமயப்பணியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். சோழநாட்டில் காணப்படும் திருநாகேஸ்வரம் என்னும் ஆலயத்தின் மீது பக்தியுடையவர். அவ்வாலயத்திற்கு நடராஜர் சபையுடன் மண்டபத்தினையும் அமைத்துக் கொடுத்தவர். அத்துடன் தமது ஊராகிய குன்றத்தூரில் திருநாகேச்சரம் என்ற சிவாலயத்தினையும் அமைத்தார். அவ்வாலயத்தில் நித்திய நைமித்திய கிரியைகள் கிரமமாக இடம் பெறுவதற்காக நிலம் முதலான மானியங்களை வழங்கினார்.

அரச பணியிலும் ஆலயப் பணியிலும் சிறந்து விளங்கிய சேக்கிழார் சமய இலக்கியத்துக்காகவும் பணியாற்றியுள்ளார். அவர் வாழ்ந்த காலப்பகுதியில் சமண சமயம் செல்வாக்குப் பெற்று இருந்தது. சைவ மன்னனாகிய அநபாய சோழன் சமண சமய காப்பியமாகிய சீவகசிந்தாமணியைக் கற்றுப் போற்றிப் புகழ்ந்து வந்தான்.

இந்நிலை கண்ட சேக்கிழார் மனம் வருந்தினார். ''அரசர் பெருமானே! இம்மைக்கும் மறுமைக்கும் வழிகாட்டும் சைவத்தை தாங்கள் சைவனாய் இருந்தும் மறந்து; போலிச் சமணத்தில் பற்றுக் கொண்டு அவர்களின் காப்பியத்தினை பாராட்டி வருகின்றீர்கள்; சிவனடியார்களின் வரலாற்றைக் கேட்க மறந்துள்ளீர்கள்; அதுவே இம்மைக்கும் மறுமைக்கும் பயன்தருவது; முத்திப் பேற்றினை அளிப்பது'' எனக் கூறினார். அதனைக் கேட்ட மன்னன் அநபாயன் சிவனடியார்களது வரலாற்றினைக் கூறுமாறு சேக்கிழாரை வேண்டினான்.

அதற்கு இசைந்த சேக்கிழார் ''மன்னனே! திருவாரூரில் எழுந்தருளியுள்ள தியாகேசப் பெருமான், அடியார்களது பெருமைகளைப் புகழ்ந்து பாடுமாறு சுந்தரரிடம் வேண்டினார். ''தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்'' என்று அடியெடுத்துக் கொடுத்தார். சுந்தரர் **திருத்தொண்டர்த் தொகை** என்னும் நூலினைப் பாடினார். சுந்தரர் பாடிய சிவனடியார்களின் வரலாற்றினை திருநாரையூரில் வாழ்ந்த நம்பியாண்டர் நம்பி அறிந்தார். பொல்லாப் பிள்ளையாரின் திருவருள் பெற்று திருத்தொண்டர்த் தொகையை விரித்து **திருத்தொண்டர் திருவந்தாதி** பாடினார். அதனை அறிந்த மன்னன் இராஜராஜ சோழனும் சிவாலய தேவரும் பாராட்டினர்'' என்று அநபாய சோழமன்னனுக்கு கூறினார். அத்துடன் அவர் திருத்தொண்டர் திருவந்தாதியை ஓதி பொருளையும் விளக்கினார். அதைக் கேட்ட மன்னன் அநபாயன் மெய்சிலிர்த்து உள்ளமுருகி நின்றான். தான் கேட்டு மகிழ்வுற்றதைப்போல் அனைவரும் கேட்டு மகிழ்வெய்த வேண்டும் என எண்ணினான். சிவனடியார்களின் வரலாற்றினைப் பெரும்காப்பியமாகப் பாடியருளுமாறு சேக்கிழாரை வேண்டினான்.

சேக்கிழார் சிவனடியார்களின் வரலாற்றினைப் பாடுவதற்குச் சுந்தரர் பாடிய திருத்தொண்டர்த் தொகையை முதன்நூலாகவும், நம்பி பாடிய நயிது திருத்தொண்டர் திருவந்தாதியை வழிநூலாகவும் கொண்டார். அத்துடன் தமிழகத்தில் சிவனடியார்கள் வாழ்ந்த ஊர்கள் தோறும் சென்று அங்கு சிவனடியார்கள் பற்றி வழங்கப்பட்டு வந்த செய்திகளைச் சேகரித்தார். அவற்றை அடிப்படையாகக் கொண்டு சிவனடியார்களின் வரலாற்றினைக் கூறும் பெரிய புராணத்தினைப் பாடுவதற்குத் தில்லைக்குச் சென்றார்.

தில்லைக்கு வந்த சேக்கிழார் திருத்தொண்டர்களது பெருமையைப் பாடவுள்ளேன் அருள்பாலிக்க வேண்டும் என நடராஜப் பெருமானை வேண்டினார். அப்பொழுது **''உலகெலாமுணர்ந்தோதற்கரியவன்...''** என்று இறைவன் அடியெடுத்துக் கொடுத்தார். அதனை கடவுள் வாழ்த்து செய்யுளாகவும் சுந்தர மூர்த்தி நாயனாரை அந்நூலின் பாட்டுடைத் தலைவராகவும் கொண்டு **திருத்தொண்டர் புராணம்** என்னும் பெரிய புராணத்தினை பாடியருளினார்.

திருத்தொண்டர் புராணம் அறுபத்து மூன்று தனியடியார்களினதும் ஒன்பது தொகையடியார்களினதும் வரலாற்றைக் கூறுகின்றது. திருமலைச் சருக்கம் முதல் வெள்ளையானைச் சருக்கம் வரையிலான பதின்மூன்று சருக்கங்களையுடையது. அதில் 4286 பாடல்கள் காணப்படுகின்றன.


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

திருத்தொண்டர் புராணம் பெருமைக்குரிய சிவனடியார்களின் வரலாற்றினைக் கூறுவதனால் அதனைப் **பெரிய புராணம்** என அழைக்கலாயினர்.

பெரிய புராணத்தின் சிறப்பினையும் சேக்கிழாரது பெருமையையும் சிறப்பிக்குமுகமாக; பெரிய புராணத்தினை ஏந்தியவாறு சேக்கிழார் யானை மீது அமர்ந்திருக்க மன்னன் அநபாய சோழன் பின்னே அமர்ந்திருந்து கவரி விசிக் கொண்டிருக்க.. அந்தணப் பெருமக்களும் சிவனடியார்களும் புடை சூழ்ந்து வர ஊர்வலம் தில்லையைச் சென்றடைந்தது. அங்கு சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தினை நடராஜப் பெருமானது திருவடிகளில் வைத்தார். தனக்குக் கிடைத்த தவப்பயனைக் கண்டு மகிழ்வுற்ற அநபாயச் சோழன் **தொண்டர் சீர் பரவுவார்** என்ற பட்டத்தினை சேக்கிழாருக்கு அளித்தார். அத்துடன் பெரிய புராணத்தினை செப்பேடுகளில் எழுதுவித்து அதனை மக்கள் போற்றும்படி செய்தான். பெரியபுராணம் திருமுறைகளுள் பன்னிரண்டாவதாகப் சேர்க்கப்பட்டு போற்றப்படுகின்றது. சிவத் தொண்டராகிய சேக்கிழார் சுவாமிகள் வைகாசிப் பூச நன்னாளில் இறைவனது திருவடியை எய்தினார். அவரது குருபூசை ஆண்டு தோறும் **வைகாசி மாதப் பூச** நட்சத்திரத்தில் கொண்டாடப்படுகின்றது. உமாபதி சிவாச்சாரியார் சேக்கிழாரது பக்தி மேம்பாட்டினைக் கண்டு வியந்து **சேக்கிழார் புராணம்** என்னும் நூலினைப் பாடியுள்ளார். அதனை பின்வரும் சேக்கிழார் புராண பாடல் மூலம் அறியலாம்.



**தில்லை வாழ் அந்தணரே முதலாகச் சீர்படைத்த**
**தொல்லை அந்தாதித் திருத் தொண்டர் தொகையடியார்பதம்போற்றி**
**ஒல்லையவர் புராணகதை உலகறிய விரித்துரைத்த**
**செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழார் அடி போற்றி!**

## 📖 பாடச்சுருக்கம்

- சைவத்தின் பக்தியாளர்களுள் சேக்கிழாரும் ஒருவர்
- அநபாய சோழ மன்னனால் கௌரவிக்கப்பட்டவர்.
- ஆலயங்கள் தோறும் திருப்பணிகள் ஆற்றியவர்.
- திருத்தொண்டர்களின் பெருமை கூறும் திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணத்தை அருளியவர்
- தில்லையில் முத்தியடைந்தவர்.

## ✍ பயிற்சிகள்

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. சேக்கிழாரது இயற்பெயரை எழுதுக.
2. அநபாய மன்னன் சேக்கிழாரை எவ்வாறு சிறப்பித்தான்?
3. சேக்கிழார் பெரியபுராணம் பாடுவதற்குக் காரணமாக அமைந்த சூழ்நிலையைக் குறிப்பிடுக.
4. பெரிய புராணத்தினைப் பாடுவதற்கு மூலமாக அமைந்த முதல் நூலையும் வழிநூலையும் தருக.
5. சேக்கிழார் புராணத்தினைப் பாடியவரின் பெயரை எழுதுக.

## ॐ செயற்பாடு

- உங்கள் பாடசாலையில் சேக்கிழாரது குருபூசையினை நடாத்துவதற்கு வேண்டிய முன்னேற்பாடுகளை எழுதிக் கலந்துரையாடுக.
- பெரியபுராணம் குறிப்பிடும் மெய்யடியார்களின் பெயர்களை அட்டை ஒன்றில் எழுதிக் காட்சிப்படுத்துக.


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

## ஆ. அருணகிரிநாதர்

முருகனடியார்களுள் ஒருவராக விளங்குபவர் அருணகிரிநாதர். அவர் பதினைந்தாம் நூற்றாண்டில் தமிழகத்தின் திருவண்ணாமலையில் வாழ்ந்தவர். அவரது இயற்பெயர் பெற்றோர்கள் பற்றி அறியுமாறில்லை.

அருணகிரிநாதர் தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் தேர்ச்சி மிக்கவராக விளங்கினார். அவர் இயல்பாகவே கவிபாடும் ஆற்றல் பெற்றவர். அவர் செல்வந்தராகவும் சிறந்த இல்லத் தலைவராகவும் விளங்கினார். விதிவசத்தால் தவறான ஒழுக்கங்களில் ஈடுபட்டுவந்தார். ஈற்றில் தனது கைப்பொருட்கள் அனைத்தையும் இழந்து தீராத நோய்களுக்கு ஆளானார்.

ஊரிலுள்ளவர்கள் அவரது நிலையைக் கண்டு ஏளனம் செய்தனர். அதனால் மனம் வருந்திய அருணகிரிநாதர் இவ்வுலகில் வாழ விருப்பமின்றி தன்னை மாய்த்துக் கொள்ள முற்பட்டார். அந்நிலையில் அவர் முன் தோன்றிய பெரியவர் ஒருவர் திருவண்ணாமலையில் உள்ள அருணாச்சலேஸ்வரரை வழிபட்டு வருமாறு உபதேசித்தார். அருணகிரியார் அருணாச்சலேஸ்வரர் ஆலயத்தின் வடகோபுர வாசலில் (வல்லாள கோபுரம்) அமர்ந்து இருந்து பலகாலம் தவம் புரிந்தார். ஆயினும் இறைவனது திருவருள் கைகூடவில்லை. அதனால் அவர் மனங்கலங்கி உயிரை விடுவதே உத்தமம் என்று கருதினார். கோபுரத்தின் உச்சிமேல் ஏறிக் கீழேகுதித்தார். அப்போது முருகப் பெருமான் அவர் முன் தோன்றினார். அவரைத் தனது திருக்க ரங்களினால் தாங்கினார். திருவடிதீட்சை அளித்து நாவில் வேலினால் சடாட்ஷர மந்திரத்தினை எழுதினார். அத்தோடு அட்சர மாலை ஒன்றினை அளித்து தம் புகழினைப் பாடுமாறு அருள் பாலித்தார்.

அருணகிரிநாதர் அவ்வாறு பாடத் தயங்கி நின்றபோது முருகப்பெருமான் **''முத்தைத் தருபத்தித்திரு நகை....''**என அடியெடுத்துக் கொடுத்துத் திருப்புகழினைப் பாட வேண்டிக் கொண்டார். அதன் பிரகாரம் சந்தப் பா வகையைச் சேர்ந்த **திருப்புகழ்** பாடல்களை அருணகிரிநாதர் பாடியருளினார். அருணகிரிநாதர் முருகன் திருவருளால் பிணியெல்லாம் நீங்கப் பெற்ற செய்தி எங்கும் பரவியது. நாயக்க மன்னனாகிய பிரவுடதேவ மகாராஜன் (இரண்டாவது தேவராயர்) அச்செய்தியினை அறிந்தான். அருணகிரிநாதரை வரவழைத்து வணங்கி தனது ஆஸ்தான புலவராக இருக்கும் படி வேண்டிக் கொண்டான். அவ்வேண்டுதலை ஏற்று அவர் ஆஸ்தான புலவரானார்.

அருணகிரிநாதர் பிரவுடதேவ மகாராஜனது ஆஸ்தான புலவராக விளங்கியமையால் அவரது சம காலத்தில் வாழ்ந்த புலவர்களில் சிலர் அவர் மீது பொறாமை கொண்டனர். பிரபுடதேவ மன்னனின் முன்னைய ஆஸ்தான புலவனாக விளங்கிய சம்பந்த ஆண்டான் அவர் மீது பொறாமை கொண்டான். பொறாமை மிகுதியினால் சம்பந்த ஆண்டான் மன்னனை நோக்கி ''நான் தேவி பராசக்தியை இச்சபையிலே காட்சியளிக்கச் செய்வேன் இவர் தமது கடவுளாகிய முருகப் பெருமானைக் காட்சியளிக்கச் செய்வாரா?''எனச் சூழுரைத்தான். அதைக் கேட்ட அருணகிரிநாதர் **''அதல சேடனாராட.........''** என்ற திருப்புகழ் பாடலைப் பாடினார். அப்போது முருகப் பெருமான் சபைமுன் தோன்றி அருணகிரிநாதருக்கு அருள்பாலித்தார்.


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

அருணகிரிநாதரது சமகாலத்தில் வாழ்ந்த மேலும் பல புலவர்கள் அவர் மீது பொறாமை கொண்டனர். அவருடன் போட்டியிட்டு தோல்வி உற்றனர். இறுதியில் அவர்கள் தமது தவறை உணர்ந்தனர். அவரிடத்தில் அன்பு கொண்டு ஒழுகலாயினர். வில்லிபுத்தூரர் என்னும் புலவர் அருணகிரிநாதரை வாதில் வெல்ல வேண்டும் என்னும் நோக்கில் திருவண்ணாமலைக்கு வந்தார். அவ்விருவரும் அரசர் முன்னிலையில் அறிஞர் குழாம் சூழ்ந்திருக்க தம் வாதத்தை ஆரம்பித்தனர். ஒருவர் பாட மற்றவர் பொருள் கூறுவது என்ற அடிப்படையில் அவ்வாதம் நடைபெற்றது. அருணகிரிநாதர் **கந்தரந்தாதி** பாடல்களைப் பாட வில்லிபுத்தூரர் உரை கூறினார். அதன் 54 ஆம் பாடலாகிய **''திதத்தத்த.........''** எனத் தொடங்கும் பாடலை பாடிய பொழுது வில்லிபுத்தூரர் பொருள் கூற முடியாது வாதில் தோல்வியுற்றார். அருணகிரிநாதரது பக்தி வெளிப்பாட்டினையும் கவித்துவ ஆற்றலையும் நன்குணர்ந்த வில்லிபுத்தூரர் அவரை வணங்கிப் போற்றினார்.

அருணகிரிநாதர் சித்தர்களைப் போன்று கூடு விட்டு கூடு பாயும் வல்லமையுடையவர். அவரை ஆதரித்து அன்பு கொண்டொழுகிய பிரபுடதேவ மன்னன் பார்க்கும் சக்தியை இழந்தான். அவருக்கு ஏற்பட்ட நிலையைக் கண்டு அருணகிரிநாதர் மனம் வருந்தினார். அப்போது அங்கு வந்த பெரியவர் ஒருவர் ''தேவலோகத்தில் உள்ள பாரிஜாத மலரினைக் கொடுத்தால் மன்னனுக்கு மீண்டும் கண்பார்வை வரும்'' என ஆலோசனை கூறினார். அருணகிரிநாதர் தம் உடலை மலையில் (திருவண்ணாமலை) வைத்துவிட்டுக் கிளி உடம்பில் புகுந்து தேவலோகம் சென்றார். இந்நிலையில் சம்பந்தாண்டான் ''மன்னனுக்கு வேண்டிய பாரிஜாத மலரை கொண்டு வரும் திறமையற்றவராக அருணகிரி நஞ்சுண்டு இறந்தார்'' என பொய்யுரைத்தான். அதனைக் கேட்டவர்கள் அருணகிரியாரின் வெற்றுடலைத் தீயிலிட்டனர். கிளியுருவுடன் வானுலகு சென்ற அருணகிரிநாதர் பாரிஜாத மலருடன் திரும்பி வந்தார். தமது உடலுக்கு நேர்ந்த கதியினைக் கண்டு மனம் வருந்தினார். கிளியுருவுடனே தமது இறுதி நாட்களைக் கழித்தார்.

அருணகிரிநாதர் கிளியுருவில் திருத்தணிகை முருகனாலயத்தில் இருக்கும் போது **கந்தரனுபூதி, கந்தர் அலங்காரம்** என்னும் நூல்களைப் பாடியுள்ளார். இறுதியில் கிளி உருவிலேயே திருத்தணிகை முருகனது கையில் வாசம் செய்து முத்திப் பேற்றினை அடைந்தார். அவர் முத்திப் பேற்றை அடைந்த தினமாக **ஆனிமாத மூல நட்சத்திர** தினம் அனுட்டிக்கப்படுகின்றது.

**வாக்குக்கு அருணகிரி** என பிற்காலத்தவர்கள் போற்றுமளவுக்கு பக்தி இலக்கியங்கள் பலவற்றை அருணகிரிநாதர் படைத்துள்ளார். **திருப்புகழ், கந்தரந்தாதி, கந்தரனுபூதி, கந்தரலங்காரம், திருவகுப்பு, வேல் விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம், திருவெழு கூற்றிருக்கை** என்பன அவையாகும்.

அருணகிரிநாதர் பாடிய நூல்களுள் சிறப்பானது திருப்புகழ் ஆகும். அது 16,000 பாடல்களைக் கொண்டிருந்தது. ஆயினும் நமக்குக் கிடைக்கும் திருப்புகழ் பாடல்கள் 1346 ஆகும். திருப்புகழ் தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் விளங்கிய முருகனாலயங்களின் சிறப்பினையும் அங்கு எழுந்தருளியுள்ள முருகப் பெருமானது அருட்திறனையும் விபரிக்கின்றது. அத்தோடு சந்தச் சிறப்பும் தாளச் சிறப்பும் ஒருங்கு சேர அவை பாடப்பட்டுள்ளன.

ஈழநாட்டில் உள்ள கதிர் காமத்தின் மீது அருணகிரிநாதர்

**...... மணி தரளம் வீசி யணியருவி சூழ**
**மருவு கதிர் காமப் பெருமாள் காண்!**

என்றும்

**...... கதிர் காம வெற்பில் உறைவோனே**
**கனக மேரு ஒத்த புயவீரா!**

என்றும்

**.... குறமாதைப் புணர்வோனே குகனே சற்குமரேசா**
**கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே!**

எனப்பலவாறு கதிர்காமத்தினதும் கதிர்காமத்தின் மீது எழுந்தருளியுள்ள முருகப் பெருமானதும் திருப்புகழைப் பாடியுள்ளார்.

**.... நிலைக்கு நான் மறை மகத்தான பூசுரர்**
**திருக் கொணாமலை தலத்தாரு கோபுர**
**நிலைக்குள் வாயினில் கிளிப்பாடு பூதியில் வருவோனே**

என்ற திருப்புகழ் அடிகளின் மூலம் திருகோணமலை முருகனாலயத்தின் சிறப்பினை அறியலாம்.

அருணகிரிநாதரின் பெருமைகளையும் சிறப்புகளையும் நன்குணர்ந்த தாயுமான சுவாமிகள்

**ஐயா! அருணகிரி அப்பா! உன்னைப் போல**
**மெய்யாக ஒரு சொல் விளம்பினார் யார்?**

என்று வியந்து போற்றுவார்.


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

## 📖 பாடச்சுருக்கம்

- அருணகிரிநாதர் பதினைந்தாம் நூற்றாண்டில் தமிழகத்தில் வாழ்ந்தவர்.
- முருகனது திருவருளால் துன்பங்கள் நீங்கப் பெற்றவர்.
- பல புலவர்களை முருகனது திருவருளால் வென்று அவர்களுக்கு முருகனது பெருமைகளை உணர்த்தியவர்.
- சந்தக் கவியுடன் கூடிய இலக்கியங்களைப் படைத்தவர்.
- இந்தியாவிலும், இலங்கையிலுமுள்ள முருகனாலயங்களின் சிறப்புக்களை பாடியவர்.

## ✍ பயிற்சி

**அ. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. அருணகிரிநாதர் வாழ்ந்த காலத்தையும் இடத்தையும் தருக.
2. அருணகிரிநாதருக்கு முருகப் பெருமான் எவ்வாறு அருள் புரிந்தார்?
3. வில்லிப்புத்தூரர் அருணகிரிநாதரின் எந்தப் பாடலுக்கு பொருள் கூற முடியாது தவித்தார்?
4. அருணகிரிநாதர் பாடிய முருகபக்தி இலக்கியங்கள் யாவை?
5. அருணகிரிநாதர் ஈழநாட்டில் உள்ள எவ்வாலயங்களின் மீது திருப்புகழ் பாடியுள்ளார்?

## ௐ செயற்பாடு

- ♦ நீர் அறிந்த அருளாளர் ஒருவரின் சிறப்புக்களை அருணகிரிநாதரது சிறப்புக்களோடு ஒப்பிட்டு எழுதி காட்சிப்படுத்துக.
- ♦ ஆசிரியரின் உதவியுடன் திருப்புகழில் உள்ள கதிர்காமம், திருகோணமலை திருப்புகழ் பாடல்களைத் தெரிவு செய்து அவற்றின் சிறப்புக்களை எழுதுக.